# 12

# சிந்தித்தல்



# THINKING

# 12

## எப்படிச் சிந்திக்கக்கூடாது ?

HOW NOT TO THINK

**1**

உங்களைப் பற்றிப் பெரிதாய் எண்ணக்கூடாது.

**2**

மண்ணுலகையே சிந்தித்துக்கொண்டிருக்கக்கூடாது.

**3**

விலக்கப்பட்டவற்றை விரும்பக்கூடாது.

**4**

உங்கள் மனதிற்குள் கண்டதையும் திணிக்கக்கூடாது.

**5**

உங்கள் மனதைச் செயலற்று வைத்திருக்கக்கூடாது.

**6**

எதைக் குறித்தும் அதிகம் கவலைப்படக்கூடாது.

**7**

உங்கள் நினைவில் கடவுளை ஓரங்கட்டக்கூடாது.

**8**

எல்லாவற்றையும் பிறர் அறிய யோசிக்கக்கூடாது.

**9**

ஆத்திரப்பட்டு முடிவுகள் எடுக்கக்கூடாது.

**10**

கடந்த காலத்தையே நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

# 12

## எப்படிச் சிந்திக்கக்கூடாது?

### அறிமுகவுரை

■ இப்பொருளின் அதிமுக்கியத்துவம் —

(அ) *"அவன் நினைவு எப்படியோ, அப்படியே அவன்"* ... நீதி 23:7அ
நீங்கள் நினைப்பதைவிட நீங்கள் கூடுதலோ குறைவோ அல்ல.

(ஆ) *"எல்லாவற்றையும்விட இருதயமே திருக்குள்ளது"* ... எரே 17:9,10

(இ) பைபிளிலேயே மிகச் சோகமான வசனம் ... ஆதி 6:5,6
*"சிந்தனைகளெல்லாம் ... நாள் முழுதும் ... தீயதே"*
மனிதனுடைய இதயம் அவ்வளவு மோசமாயிருந்ததால்,
மகிபனுடைய இதயம் அவ்வளவு விசனப்பட்டது!

(ஈ) சிந்தனைதான் நல்லதுக்கும் தீயதுக்கும் **வேர்.**
லூக் 6:43-45 ... *நல்லதை ... பொல்லாததை ... இருதயத்தின் ...*

நீ நல்லவனானால், உன் இதயம் நல்லதென்று பொருள் ...
நீ கெட்டவனானால், உன் இதயம் கெட்டதென்று பொருள்

பிறர்மீது பழி போடாதே; நீ எப்படி என்பதற்கு நீயே பொறுப்பு!

■ *"சரியான வாழ்வு சரியாய்ச் சிந்திப்பதில் தொடங்குகிறது"* — புரூஸ் மில்னே
*"ஆன்மீகப் போராட்டம் சிந்தனை உலகில்தான்"* — பிரான்சிஸ் ஷேபர்
*"நினைவுகள்தான் செயல்களின் வித்து"* — ரிச்சர்ட் சிபெஸ்
*"தூய வாழ்வின் இரகசியம் தூய சிந்தனை"* — ஜான் ஸ்டாட்

■ "சொல்லுக்கும்" "செயலுக்கும்" வேர் சிந்தனைதான் —
ரோ 11:16ஆ ... *வேர் பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் ...*

இலை, கிளை தறிப்பதிலேயே நாம் நேரத்தை வீணடிக்கிறோம்;
ஆனால் *"வேர்"* அருகிலேயே *"கோடரி"* வைக்கப்படவேண்டும் —
மத் 3:10 ... திருமுழுக்கினன் யோவானின் செய்தி இதுதான்

- சிந்தனைகள் பிறப்பிப்பது சொற்கள்; சொற்கள் பிறப்பிப்பது செயல்கள்.

  Thoughts ⏩ Words ⏩ Deeds

  மத் 12:34 ... *இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்*

அதாவது, நமது நடத்தைக்கு எண்ணங்கள்தான் அடித்தளம்.
அவற்றைத் திருவசனத்தால் மட்டுமே திருத்தலாம் —

எபி 4:12 ... *வார்த்தை ... நினைவுகள் ... யோசனைகள் ...*
*வகையறுக்கிறது ...*

- பல வியாதிகளுக்குக் காரணம் மனநிலைக் கோளாறுதானென்று விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் கண்டறிந்துள்ளனர்.
  மன நோய்க்குச் சிகிச்சையளிக்கும் மனோதத்துவத்திற்காய்த் தேவனைத் துதிப்போம்.
  ஆனால் முடிவான பரிகாரம் திருமறைதான் — எபி 4:12

- இருவிதச் சிந்தனைகள் —

  (அ) இயல்பான சிந்தனை (natural)
  (மறுபடி பிறக்காதவனுக்குரியது)

  (ஆ) ஆன்மீகச் சிந்தனை (spiritual)
  (மறுபடி பிறந்தவனுக்குரியது)

மறுபடி பிறந்தவனுக்கு ஆன்மீக ரீதியில் சிந்திக்கத் திறன் உண்டு;
ஆனால் அவனது சிந்தனா சக்தி இறைவார்த்தையினாலும் தூயாவியினாலும் பயிற்றுவிக்கப்படவேண்டும்.

(உ-ம்) பேதுரு ஓர் அப்போஸ்தலனென்றாலும் இயேசு அவனைக் கடிந்துகொண்டார்:

மத் 16:23 ... *தேவனுக்கேற்றவை ... சிந்தியாமல் ...*
*மனிதருக்குரியவை ...*

## எப்படிச் சிந்திக்கக்கூடாது?

### 1. உங்களைப் பற்றிப் பெரிதாய் எண்ணக்கூடாது.
Do not think too much of yourself.

■ அப்போஸ்தலர் நெடுகவே போதித்தது —

ரோ 12:3 ... *எவனும் ... மிஞ்சி எண்ணாமல் ...*

2 கொரி 3:5 ... *யோசிக்கிறதற்கு ... எங்களாலே ... அல்ல ...*

கலா 6:3 ... *தன்னைப் பெரிதாய் எண்ணினால் ... வஞ்சிக்கிறான்*

சிந்தையில் ஒரு தெய்வீக மாற்றமே இதற்குத் தீர்வு

ரோ 12:1,2 ... *மனம் புதிதாகிறதினாலே ...*

■ நடைமுடை ஆலோசனைகள்:

**(அ)** உங்களுக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணாதீர்.

இது ஓர் அகம்பாவச் சிந்தை.

1 கொரி 8:2 ... கற்றுக்கொள்ளும் மனப்பான்மை

1 கொரி 13:9 ... *நமது அறிவு குறைவுள்ளது*

எனக்குத் தெரியாததைவிடத் தெரிந்தது மிகக் குறைவு.

**(ஆ)** உங்களுக்கு இருப்பவை குறித்துப் பெருமைப்படாதீர்.

☐ குடும்ப அந்தஸ்து ... மத் 3:9 ... *நினையாதிருங்கள் ... கோடரி ... வேர்*

☐ திறமை/தாலந்து ... 1 கொரி 4:6,7 ... *"சிறந்தவனாக்குபவர் யார்?"*

எதுவுமே ஏற்கனவே இருந்ததல்ல... எல்லாமே பெற்றதுதான்.

(உ-ம்) உடல் தோற்றம் ... வளர்ச்சி

☐ அந்தஸ்து ... நூற்றுக்கதிபதி ... (லூக் 7:1-7)

லூக் 7:7 ... *"நான் அவ்விதம் **எண்ணவுமில்லை.**"*

அதிகாரிகள் இன்றையப் பிரசங்கிமாரிடம் நடக்கும்விதம் ...

☐ முந்துரிமை/வெற்றிகள்/தேவ தயவு

உபா 9:4,5 ... *இருதயத்திலே ... என் நீதி ... சொல்லாதே ...*

**(இ)** மேட்டிமையானவற்றைச் சிந்திக்காதீர்.

ரோ 12:16 ... *தாழ்மையானவர்களுடன் பழகுங்கள் ...*

சங் 131:1,2 ... *எனக்கு மிஞ்சினவைகளில் தலையிடேன்*

- அறிவுச் செருக்குக்கு மூன்று சவால்கள் —

  ரோ 11:34,35 ... *யார்? ... யார்? ... யார்?* (மும்முறை)

- இயேசுவைப் போல தாழ்மையின் சிந்தை —

  பிலி 2:3-8 ... *அடிமையின் வடிவு ... தம்மையே தாழ்த்தி ...*

- எப்பொழுதும் உள்ளில் எழுப்புதல் அனுபவிக்க ஒரே வழி —

  ஏசா 57:15 ... *உன்னதம் ... பணிவு ... உயிர்ப்பிக்க ...*

- மதுரை V. சந்தியாகு ஐயரது பாடல்:

*விந்தைக் கிறிஸ்தேசு ராஜா!*
*உந்தன் சிலுவை என் மேன்மை.*

*சுந்தரம் மிகும் இந்தப் பூவில்*
*எந்த மேன்மை எனக்கிருப்பினும், —*

*திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி,*
*செல்வாக்குகள் மிக விருப்பினும்,*
*குருசை நோக்கிப் பார்க்க எனக்*
*குரிய பெருமை யாவும் அற்பமே. —*

(கிறிஸ்தவக் கீர்த்தனைகள், 192)

## 2. மண்ணுலகையே சிந்தித்துக்கொண்டிருக்கக்கூடாது.
Do not be overoccupied with earthly things.

■ *தேடுங்கள் ... மேலானவைகளையே நாடுங்கள் ...*

கொலோ 3:1,2

ஏன்? ... நாம் மரித்தவர்கள் ... (வச 3)

இறந்த மனிதன்மீது போடும் பூக்களால் அவனுக்குப் பயன்?

■ சாலொமோனுக்கு நடந்தது என்ன?

மண்ணுலகச் சிற்றின்பங்களே அவனை நிரப்பியிருந்தன —

| | |
|---|---|
| *மதுபானம்* (பிர 2:3) | (Wine) |
| *வேலைகள்* (வச 4-6) | (Works) |
| *வேலைக்காரர்கள்* (வச 7அ) | (Workers) |
| *செல்வம்* (வச 7ஆ, 8) | (Wealth) |
| *பாடல், இசை* (வச 8) | (Music) |
| *ஞானம்* (வச 9) | (Wisdom) |
| *பெண்கள்* (வச 10) | (Women) |

(700 மனைவிகள் + 300 மறுமனையாட்டிகள்
(1 இரா 11:3)

முடிவு?

தற்கொலை எண்ணம்! (வச 17)

எல்லாம் *"மாயை"* (Wind)

(உ-ம்) பல கோடீஸ்வரரும் நடிகரும் இந்நிலைக்குத்தான் வருகின்றனர்.

அப்போஸ்தல உபதேசம்:

1 யோ 2:15 ... *உலகிலும் ...அன்புகூராதிருங்கள் ...*

■ அப்படியானால் நியாயமான இன்பங்களையும் அனுபவிக்கக்கூடாதா? இல்லை, அளவுக்குமீறிய அனுபோகமே கண்டிக்கப்பட்டுள்ளது —

1 கொரி 7:29-31 ... *தகாதவிதமாய் அனுபவியாதபடி ...*

பொருட்கள் உங்களிடமா, நீங்கள் பொருட்களிடமா?

■ பண ஆசை —

1 தீமோ 6:9,10 ... *செல்வந்தராக விரும்புவோர் ...*

நீதி 23:5 ... *"பொருள்மீது கண்களைப் பறக்கவிடுவானேன்?"*

அதாவது, சிந்தை/கற்பனை/திருப்தி என்பது **மனதின்** நிலை —

1 தீமோ 6:6-8

■ நீங்கள் ஏற்கனவே செல்வந்தராயிருந்தால் —

சங் 62:10 ... ***இதயத்தை*** *அதன்மீது வைக்காதிருங்கள்.*

லூக் 12:16-20 ... *பணக்கார முட்டாள் ... தனக்குள்* ***சிந்தித்து*** *...*

1 தீமோ 6:17 ... *செல்வந்தர் ... இறுமாப்பான* ***சிந்தை*** *...*

■ முதிர்ந்த பேராசிரியர் ஒருவர் எனக்குச் சொன்ன அறிவுரை:

*"எளிய வாழ்வு ... உயர்ந்த சிந்தை!"*
"Simple living ... High thinking!"

பிரசங்கிமார் பலர் தோற்றது இங்குதான்.
விளைவு: செல்வம் வந்தது, செய்தி தொலைந்தது.

அப்போஸ்தலரோ —

2 கொரி 6:10...*"தரித்திரர் ... அநேகரைச் செல்வந்தராக்குவோர்"*

■ மனமும் பணமும் அவ்வளவாய்ப் பிணைக்கப்பட்டிருப்பதால், **கொடுத்தல்** நிறைவான மனதுடன் வரவேண்டும் —

2 கொரி 8:11,12 ... *முதலாவது மனவிருப்பமிருந்தால் ...*
9:2,7 ... *மனவிருப்பம் ... உற்சாகம்*

(பார்க்க: பக்கங்கள் 52-54, 104-106, 563-565, 676-679, 755-758)

## 3. விலக்கப்பட்டவற்றை விரும்பக்கூடாது.
Do not desire forbidden things.

■ பாவத்தின் வேர் இருப்பது *"இருதயத்தில்"* ரோ 1:21,22
பைபிளிலேயே மிக இருண்ட பாவப்பட்டியல் —
வச 23-32
அவர்கள் தேவனது உதவியைத் தேடாததால்,
*"கேடான **சிந்தைக்கு**"* ஒப்புக்கொடுக்கப்பட்டனர் (வச 28)

இருதயத்தை மாசுபடுத்தும் முதற்காரியம்:
மத் 15:19 ... *இருதயத்திலிருந்து பொல்லாத **சிந்தனைகள்** ...*

நிலைகள் —
யாக் 1:13-16
முதலாவது ... *இச்சை/விருப்பங்கள்*
அடுத்தது ... *சோதனை*
இறுதியாக ... *பாவம்*
எச்சரிப்பு: *"வஞ்சிக்கப்படாதிருங்கள்"*

எனவேதான் இயேசு இச்சையான **எண்ணத்தை**
விபச்சாரத்திற்கு ஒப்பிட்டுப் பேசினார் (மத் 5:27,28)

■ சாத்தான் பிரதானமாக நமது "மனதையே" குறி வைக்கிறான் —
2 கொரி 11:3 ... *சர்ப்பம் ... மனது ... கெடுக்கப்படுதல் ...*

(உ-ம்) அவனால் யோபுவின் உள்ளத்தைக் கெடுக்க முடியவில்லை;
எனவேதான் அவனது உடலைத் தொட்டான்.

பாவத்தின்மீது வெற்றி என்பது எண்ணங்களில் வெற்றி —
ரோ 7:23 ... *மனதின் பிரமாணம்*
8:5-7 ... *மாம்ச சிந்தை ... ஆவியின் சிந்தை ...*
*மனதை அடக்காதவன் = மதிலிடிந்த நகர்* (நீதி 25:28)

■ பின்மாற்றம் துவங்குவது சிந்தையில்தான் —

எபி 11:15 ... *"விட்டு வந்த நாட்டை நினைத்தார்களானால் ..."*

மாறாக, வழி விலகியவர்களோ ...

எண் 11:4-6 ... *மிகுந்த இச்சையுள்ளவர்களானார்கள்* —

பொல்லாத சகவாசத்தினால் பாதிப்பு: *"பல இன மக்கள்"*

சங் 26:2-5 ... *"என் மனதைப் புடமிட்டுப் பாரும் ...*

*பொய்யர் ... தீயோர் ..."*

சங் 50:18-21...*திருடனோடு...ஒரு மனம்...வாயில் பொல்லாப்பு*

எனவேதான் அடிக்கடி தற்பரிசோதனை அவசியம் —

சங் 139:23,24 ... *என்னை ஆராயும் ... சோதியும் ... பாரும் ...*

அதாவது, பொல்லாதவை வெளிப்படையாய்த் தெரியா.
தற்பரிசோதனை, அறிக்கை மூலம் "மனச்சாட்சி" இரத்தத்தால்
சுத்தமாகும் —

எபி 9:14 ... *மனச்சாட்சியைச் சுத்திகரிப்பது ...*

மனச்சாட்சியைச் சுத்தமாய்க் காக்க முழு முயற்சி தேவை —

(உ-ம்) பவுல் ... அப் 24:16... *"குற்றமற்ற மனச்சாட்சி ... பிரயாசம்"*

■ முடிவு / விளைவு?

ஆனந்த தைலம் ... எபி 1:9

*... நீதியை விரும்பி ... அக்கிரமத்தை வெறுத்து ...*

— குதூகல வாழ்வு!

## 4. உங்கள் மனதிற்குள் கண்டதையும் திணிக்கக்கூடாது.

Do not overcrowd your mind.

- தினமும் நமக்கு நிறைய ''குப்பை மெயில்'' (junk mail) வருகிறது.
  அது போலவே, ''குப்பையான சிந்தனைகள்!''
  அவற்றைத் தூர எறிந்துவிடுங்கள்/நீக்கிவிடுங்கள் (delete)!

  சங் 119:113 ... *''வீண்'' சிந்தனைகளை வெறுக்கிறேன்.*

  *வீண்* = தீங்கற்றதாயிருக்கலாம், ஆனால் தேவையற்றது.

  வீண் சிந்தனைகள் வீண் வார்த்தைகளைப் பிறப்பிக்கும் —

  மத் 12:36 ... *''வீண் வார்த்தை ... நியாயத்தீர்ப்பு ...''*

  நமக்கு வரும் கடிதங்கள் —

  பல கடிதங்கள் பதிலளிக்கத் தகுதியற்றவை!
  சில கடிதங்கள் வாசிக்கவே தகுதியற்றவை!
  சில காரியங்கள் நினைவில் வைக்கத் தகுதியற்றவை!

- குப்பைக் கூளத்தை அகற்றிவிட்டுப் பயனுள்ளதையே
  இருத்திக்கொள்ளுங்கள் — பிலி 4:8

  கேட்டுப்பாருங்கள்: இது ஒழுக்கமானதா?
  இது நீதியுள்ளதா?
  இது கற்புள்ளதா?

  இது ''வடிகட்டுதலைப்'' போன்றது.
  உங்கள் மனது குப்பைத் தொட்டியாகிவிடக்கூடாது.
  நீங்கள் குப்பையைக் கிண்டுகிறவராகிவிடக்கூடாது.
  தேவையற்றதை வடிகட்டி அகற்றுங்கள்!

  தலைக்கு மேல் கழுகுகள் பறப்பதைத் தடுக்க முடியாது;
  தலையின்மேல் கூடுகட்டி முட்டையிடுவதைத் தடுக்க முடியுமே!

■ பயனற்ற எதுவும் மனதில் நுழைந்தால், அங்கேயே அது தங்கக்கூடாது—

*சங் 4:4 ... கோபம் ... பாவம் ... படுக்கை ... அமர்ந்திருங்கள்*

*... ''அமர்ந்திருங்கள்'' = இறுக்கம் வேண்டாம்.*

எபே 4:26 ... *கோபம் ... பாவம் ... அஸ்தமனம்*

:27 ... *பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள்*

சிந்தையில் வரும்போதே தீயவற்றை உதறித் தள்ளிவிடுங்கள்!

■ மனிதா் பேசுவதையெல்லாம் நினைத்துப் பார்த்து உங்களது சிந்தனா சக்தியை வீணாக்காதீர்கள் (பிர 7:21,22).

குறிப்பாக ''அரட்டை'' —

அண்ணல் காந்தியின் மூன்று குரங்குகள் —

தீயவை பார்க்காதே ... தீயவை கேட்காதே ... தீயவை பேசாதே

கண்களை மூடி... செவிகளை அடைத்து... வாயைப் பொத்தி

■ உங்கள் சொந்த வேலையில் கவனம் செலுத்துங்கள் —

பிறா் காரியங்களில் மூக்கை நுழைக்காதீர் —

1 தெச 4:12 ... *அமைதல் ... சொந்த அலுவல்கள் ...*

2 தெச 3:11,12 ... *பிறர் வேலையில் தலையீடு ...*

*அமைதலோடு வேலை செய்து ...*

வாழ்வில் கொந்தளிப்பைத் தவிர்க்கும் இரகசியம் இதுவே.

ஒரு மேலதிகாரியின் அலுவலகத்தில்:

*வேலையைப் பற்றி மட்டும் பேசு.*

*வந்த வேலையை முடித்திடு.*

*என் வேலையைச் செய்ய விடு.*

■ ***வாலிபரே,*** *தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்* தீத்து 2:6

உ-ம்) சாலொமோனிடம் தாவீது கூறியது ... (1 நாளா 28:9)

*உள்ளம் ... மனது ... எண்ணங்கள் ...*

சிதறடிக்கும் சிந்தனைகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்!

(உ-ம்) மாணவப் பருவத்தில் காதல்

இப்பொழுது எது முக்கியம் என அறிந்துகொள்ளுங்கள்.

உபா 20:5-7 ... யுத்தமும் புதுமனை புகுதலும் ...
அறுவடை ...
நிச்சயதார்த்தத்தை அடுத்துத் திருமணம் ...

இரண்டையும் செய்துவிடலாம் என நினைக்கவேண்டாம்!
உருப்படியாய் எதையும் சாதிக்க முடியாது போய்விடும்!
இரண்டில் ஒன்றில் கவனம் குறைந்துவிடும்!

■ பயனுள்ள ஆலோசனைகள் —

போதுமான ஓய்வு.
நல்ல தூக்கம் (மூளை அணுக்களுக்கு ரீசார்ஜ்).
(உ-ம்) கைபேசி போல
விடுமுறை — இறுக்கத்தைத் தளர்த்துதல்.
இயற்கையின் அழகை ரசியுங்கள்:
இயேசு: *“வானத்துப் பறவைகள் ... காட்டு மலர்கள் ...”* (மத் 6:26-29)

பகலில் அளவுக்குமீறி காரியங்களை மனதுக்குள் திணித்தால்,
இரவிலே நீங்கள் தூங்கினாலும், உங்கள் மூளை ஓய்வுற்றிருக்காது!

பிர 5:3 ... *கவலை மிகுமானால் கனவுகள் மிகும்*

## 5. உங்கள் மனதைச் செயலற்று வைத்திருக்கக்கூடாது.

Do not keep your mind passive.

■ இரு ஓரங்கள் தவிர்க்கப்படவேண்டும்:

மனதில் நெருக்கம் அல்லது வெற்றிடம்

சோம்பேறியின் மனது பிசாசின் தொழிற்சாலை!

(உ-ம்) வெறுமையான வீடு (மத் 12:43-45)

*... அசுத்த ஆவி ... பொல்லாத ஏழு ஆவிகள் ...*

அடுத்த அத்தியாயத்திலேயே —

(உ-ம்) காவல் இல்லாத நிலம் (மத் 13:25)

*மனிதர் தூங்குகையில் ... களைகளை விதைத்து ...*

எனவேதான் —

*"தெளிந்த புத்தி ... விழித்திரு ... பிசாசு ... சிங்கம்"*

1 பேது 5:8 ... தெளிந்த புத்தியே பாதுகாப்பு.

■ தேவனுக்கு அடங்கியிருத்தல் என்றால் மனதைச் செயலற்றதாக்குவதல்ல. பைபிள் அப்படிப் போதிக்கவில்லை:

□ "சிந்தியுங்கள்" என்று கிறிஸ்து அடிக்கடி கேட்டுக்கொண்டார் —

(உ-ம்) மத்தேயு சுவிசேஷம் (பக்தியுள்ள யூதருக்கு எழுதப்பட்டது)

*"என்ன நினைக்கிறீர்கள்? ... எப்படித் தோன்றுகிறது?"*

மத் 17:25 ... வரி செலுத்துவதைக் குறித்து ...

18:12 ... 100 ஆடுகள் ... 1 ஆடு ...

21:28 ... 2 மகன்கள் ... கீழ்ப்படியாமை ...

22:42 ... யாருடைய குமாரன்?

□ அப்போஸ்தலரது பழக்கம்

(உ-ம்) *பேதுரு அத்தரிசனத்தைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் ...* அப் 10:17,19,20

(உ-ம்) நிருபத்தில் எது குறித்து எழுதவேண்டுமென்று யூதா *யோசித்துக்கொண்டிருக்கையில் ...* யூதா 3

☐ அப்போஸ்தலப் போதனை

எபி 5:14 ... *நன்மை தீமை ... பயிற்சியினால் பகுத்தறிய ...*

1 பேது 1:13 ... *மனம் செயலாற்ற ஆயத்தம்* (அரைக் கச்சை)

பெல்ட் அணிந்து தோற்றத்தை நேர்த்தியாக்குவது போல!

■ பொது அறிவைக் கட்டாயம் பயன்படுத்தவேண்டும்

(உ-ம்) மகளுக்குத் திருமண ஏற்பாடு

1 கொரி 7:36,37 ... *ஒருவன் ... நினைத்தால் ...*

(உ-ம்) ஆண்களுக்கு நீள முடி

1 கொரி 11:14,15 ... *சுபாவமே போதிக்கிறதில்லையா?*

■ இரண்டுங்கெட்ட நிலை = இருமனமுள்ளவன்

யாக் 1:8 ... *இருமனமுள்ளவன் ... நிலையற்றவன் ...*

4:8 ... *இருமனமுள்ளவர்களே ... பரிசுத்தமாக்குங்கள்*

■ தேவ சித்தத்திற்கு இசைதல் என்றால் ஒன்றும் யோசியாதிருப்பதல்ல.

சங் 16:7 ... *ஆலோசனை தந்த கர்த்தர் ...*

*என் உள்ளமும் என்னை உணர்த்தும்!*

ரோ 12:1,2 ... *''புத்தியுள்ள ஆராதனை'' ...*

*மனதைப் ''புதுப்பித்தல்,'' ''புறம்பாக்குதல்'' அல்ல*

தேவனது *''நன்மையும், பிரியமும், பூரணமுமான'' சித்தம்* எதுவென்று கண்டுகொள்ளத் தீவிர முயற்சி!

யோசிக்காமல் சும்மா இருப்பது ஆன்மீகமல்ல; அது மடமை.

தவறான மேற்கோள்:

1 தெச 4:11,12 ... *''அமைதலான''* வாழ்க்கை

சோம்பேறித்தனம் அல்ல, வேலையில் ''விறுவிறுப்பு.''

■ நெடுகவே தோல்வி எனில், **சற்று நின்று** சிந்தியுங்கள் —

*உங்கள் வழிகளைச் ''சிந்தித்துப் பாருங்கள்''*

ஆகாய் 1:5,7; 2:15,18

''ஆரோக்கியமான'' கற்பனைகளை வரவேற்போம்!

**6. எதைக் குறித்தும் அதிகம் கவலைப்படக்கூடாது.**
Do not be overanxious about anything.

- அளவுக்கு மீறிய கவலையும் பதட்டமும் ஆபத்து.
இது சாத்தானுக்கு இடங்கொடுக்கிறது —

☐ பவுல்: மனத்தொய்வு
பிலி 4:6.7 ... *கவலை ... சமாதானம் ... சிந்தை*

☐ பேதுரு: கர்ச்சிக்கிற சிங்கம்
1 பேது 5:7,8 ... *கவலை ... எதிராளி ... விழுங்க ...*
நீங்கள் *"விழுங்கப்பட்டு"* விடுவீர்கள்!
நீங்களே தலையை சிங்கத்தின் வாயில் வைப்பது போன்றது!

☐ ஏசாயா 30:15-17
*"அமரிக்கை + நம்பிக்கை"* = மனதிற்குப் *"பலம்"*
நீங்கள் ஓடினாலோ, எதிரி வேகமாய்த் துரத்துவான்!
ஓடுகிற நாய் விரட்டுகிற நாய்க்குத் தொக்கு!

— எனவேதான் இயேசு சொன்னார்:
*கவலைப்படாதிருங்கள்* (= பதட்டம்) ... *நாளை ...*
மத் 6:31,32 ... அது அஞ்ஞானம்!

— ஒரு வங்கியின் கோஷம்: "இன்றே நாளை தொடங்குகிறது!"
ஆனால் திருமறை: *"அந்தந்த நாளுக்கு ... போதும்"* (மத் 6:34)

— பாலம் வருமுன்னே அதைக் கடக்க முயலவேண்டாம்!
*Sins of Saints* என்ற நூலில் Herbert Lockyer:
"நாம் பயப்படுவதில் 70% நடப்பதேயில்லை!"

— இக்கட்டு வருமுன்னரே தீர்வைச் சிந்திக்காதீர்:
(உ-ம்) *கைது செய்யப்பட்டால்* ... மாற் 13:11

■ அளவுக்கு மீறிய கவனம் பாதகச் சிந்தைக்கே நடத்தும்.

பாதகச் சிந்தை துணிவு கொள்ளாது.

பாதகச் சிந்தை தைரியமாய் எதிலும் இறங்காது.

பாதகச் சிந்தை விசுவாசத்தில் செயல்படாது.

☐ கேராரில் ஆபிரகாமின் மிஞ்சிய கவனம் (ஆதி 20:11).

இறைவாக்கையோ மறந்துவிட்டான்.

ஆதி 15:1 ... *''பயப்படாதே ... நான் உனக்குக் கேடயம்!''*

அதாவது, தாக்குதல் வரும், பாதுகாப்போ உத்திரவாதம்.

☐ தீமோத்தேயு ... *''பயமுள்ள ஆவியல்ல ... தெளிந்த புத்தி''*

2 தீமோ 1:7

அதாவது, சிறையடைப்பிற்குப் பயப்படாதே (வச 8)

— செய்தித்தாள்களையும் TV செய்திகளையும் பார்த்தபின்,

திகிலும் குழப்பமும் நம்மைக் கவ்விப் பிடிக்கின்றன;

ஆனால், நீதி 3:24-26 ... *''இன்பமான நித்திரை''*

சங் 4:8 ... *''சமாதானத்தோடே படுத்து ... சுகமாய்''* ...

■ நீங்கள் துன்புறும்போது,

அது வினோதம், புதுமை என **எண்ணாதீர்;**

ஏனெனில் (அ) 1 பேது 4:12,13 ... *கிறிஸ்துவின் பாடுகள்*

(ஆ) 5:9 ... *பிறரது பாடுகள் ...*

■ எதிர்காலம் நமது கையில் இல்லை —

அது **தேவனிடமே** இருக்கிறது! யாக் 4:13-15

(*''புகையைப்''* பிடிக்கமுடியுமோ?)

துன்பங்கள் திரளாயிருக்கலாம்; ஆனால் ஆண்டவரது ஆறுதல் —

சங் 94:19 ... *விசாரங்கள் பெருகுகையில் ... உமது ஆறுதல்கள்*

முதலாம் தேற்றரவாளன் விண்ணுலகில் **நமக்காக!** (ரோ 8:34)

இரண்டாம் தேற்றரவாளன் நம்முள்ளில் **நம்மோடு!** ( ,, :26)

இச்சத்தியத்தை அழகாய் விளக்கும் ஒரு பழைய பாடல் —

"Abide with me ..."
*என்னோடிரும், மா நேச கர்த்தரே,*
*வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே;*
*மற்றோர் ஒத்தாசை அற்றுப்போயினும்*
*நீர் மெய்ச் சகாயரே, என்னோடிரும்!*

*— Henry F. Lyte, 1793-1847*
(தன் வாழ்நாள் முழுவதும் காசநோயுடன் போராடிய
ஓர் ஆங்கிலிக்கன் போதகர்)

## 7. உங்கள் நினைவில் கடவுளை ஓரங்கட்டக்கூடாது.
Do not exclude God in your thinking.

- இது ஒரு விஞ்ஞான யுகம்.
  நாமிருப்பது ஒரு விஞ்ஞான உலகில்.

  விஞ்ஞானத்தை மதிப்போம் ...
  விஞ்ஞானத்தைப் பயன்படுத்துவோம் ...
  ஆனால் விஞ்ஞானத்தை வணங்க முடியாது.

  **தேவன்தான்** அறிவைக் கொடுக்கிறவர் —
  நீதி 1:7அ ... *கர்த்தருக்குப் பயப்படுதலே ... ஞானத்தின் ...*

  தேவனுக்கு எதிரான எந்த அறிவும் ''போலியானது'' —
  1 தீமோ 6:20,21 ... *ஞானமென்று பொய்யான பெயர் ...*
  *''ஓ தீமோத்தேயுவே!''* — குறிப்பாக வாலிபர்க்கு ...

- கடவுளை நினைவில் நிறுத்தத் தவறுதலின் விளைவுகள் —
  (அ) கெட்ட மனது
  ரோ 1:28-32 ... *கேடான சிந்தை ...*
  எப்பேர்ப்பட்ட *பாவப்பட்டியல்!*
  சங் 14:1 ... *தேவன் இல்லையென்று மதிகெட்டவன் ...*
  *கெடுத்து ... அருவருப்பான ...*

  (ஆ) குழம்பிய மனது
  எரே 6:19 ... *நினைவுகள் ... தீங்கு ...*

  மாறாக,
  ''மனதைக்'' கடவுள்மீது பதித்திருந்தால் —
  ஏசா 26:3 ... *''பூரண சமாதானம்''*
  எபிரெய மொழியில்: *''சமாதானம்! சமாதானம்!''* (இரு முறை)

அதாவது, இரவும் பகலும் கடவுளைப் பற்றிய எண்ணம் (வச 9)

*... ஆத்துமா ... இரவிலே ... ஆவி ... அதிகாலையிலும் ...*

பிற உதவிகள் எல்லாம் வீண் (வச 12,13,14)

*... வேறே ஆண்டவன்மார் ... செத்தவர் ... மாண்டவர் ...*

■ இறைப்பிரசன்னத்தைச் சிந்தியுங்கள் —

சங் 16:8 ... *கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன் ''வைத்திருக்கிறேன்''*

ஆண்டவர் எப்பொழுதும் நம்மோடுதான்;

ஆனால் நாம் அதை உணருகிறோமா?

இந்த உணர்வுதான் யோசேப்பைச் சோதனையில் காப்பாற்றியது —

ஆதி 39:9 ... *''தேவனுக்கு விரோதமாய் எப்படிப் பாவம் செய்வேன்?''*

ஆண்டவருடைய அசாதாரணப் பெயர்களில் ஒன்று —

*''எல்ரோயி''* — ஆதி 16:13 ... *''காண்கிற தேவன்''* ...

நாம் அவரது பிரசன்னத்திற்குத் தப்பியோட முடியாது —

தாவீதின் அறிக்கை: சங் 139:7-12

*... வானம் ... பாதாளம் ... சமுத்திரம் ... இருள் ...*

*இந்த அறிவு மிகுந்த ஆச்சரியம்* (வச 6)

■ முழுமையான பயபக்தி என்றால் என்ன?

ப.ஏ. : உபா 6:5 ... *இருதயம் ... ஆத்துமா ... பலம் ...*

பு.ஏ. : மாற் 12:30 ... *இருதயம் ... ஆத்துமா ... பலம்* + ***மனது***

இயேசுவே இதைச் சொன்னார்!

அதாவது, நமது ''நினைவுகள்'' எதிலும் தேவனை ஒதுக்க முடியாது!

இது நம்மைப் படைத்தவருக்கு நமது கடமை!

பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் எழுதப்பட்டது கற்களில்;

புதிய ஏற்பாட்டிலோ, இறைச்சட்டங்கள் நமது **சிந்தையில்!**

(எபி 8:10)

என்னே ஆசீர்வாதம்!

■ நமது எண்ணங்களில் நாம் தேவனை ஒதுக்குவதேன்?

தேவனைப் பற்றித் திரிக்கப்பட்ட கருத்து —

''அவர் ஒரு கொடுங்கோலர்.''

பைபிளின் தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோ 4:8ஆ).

அவர் நல்லவர் (எப்போதாவது அல்ல) எப்போதும்!

(உ-ம்) எரே 29:11 ... *சமாதானம் அருளும் நினைவுகளே* ...

எனவேதான், அவர் நம்மை உள்ளார்ந்த உறவுக்கு அழைக்கிறார் —

(வச 12,13) ... *தொழுது* ... *விண்ணப்பித்து* ... *தேடி*

ஆனால் ஒரு காரியம் —

*அவரது நினைவுகள் நமது நினைவுகளைவிட உயர்ந்தவை!*

(ஏசா 55:8,9)

■ தேவனுக்கு விரோதமாய் யோசிக்கும்படி சாத்தான் நமது மனதைத் தாக்குகிறான் —

ஏதேன் தோட்டத்தில் ஏவாளைத் தாக்கியதுபோல்

(ஆதி 3:1-5; 2 கொரி 11:3)

அதற்கு இடங்கொடாமல், அதை அடக்கிவிடுங்கள்

(2 கொரி 10:4-6)

... *தர்க்கங்கள்... நிர்மூலம்... கிறிஸ்துவுக்குச் சிறைப்படுத்தி* ...

நாம் இங்கு கவலையீனமாயிருந்தால், பின்மாற்றம் துவங்கும் —

நீதி 14:14 ... *பின்வாங்குகிறவன்* ... *தன் வழிகளிலேயே திருப்தி*

## 8. எல்லாவற்றையும் பிறர் அறிய யோசிக்கக்கூடாது.

Do not think aloud in all matters.

- சிலர் அமுக்கமாயிருப்பர், மற்றவரோ ஓட்டைவாய்க்காரர்;
  இரு ஓரங்களும் தவிர்க்கப்படவேண்டும்.

பொதுவாக, நாம் நினைப்பதையெல்லாம் வெளியே
கொட்டிவிடக்கூடாது —

நீதி 14:33 ... *ஞானம் (அமைதியாய்) தங்கும்* (ஆங்கில வேதம்)
நீதி 29:11 ... *மூடன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான்*

- உணர்ச்சி வேகத்தில் பதிலளிக்கக்கூடாது.
  **சிந்திக்க** நேரமெடுங்கள் —

நீதி 15:28 ... *நீதிமானின் மனம் பதிலளிக்க யோசிக்கும்.*
எல்லாவற்றையும் கொப்பளித்துவிடக்கூடாது!

அவசரப்பட்டுப் பேசிய "வார்த்தைகளைத்" திரும்ப எடுக்க முடியாது;
பின்னர் அமர்ந்து வேறுவிதமாய் "யோசித்தாலும்" பேசியது பேசியதே!

மத் 12:37 ... *உன் வார்த்தைகளினாலே ... தீர்க்கப்படுவாய்*

- இயேசுவே பூரண மாதிரி —

யோ 2:24,25 ... *அறிந்திருந்தபடியால் ... இணங்கவில்லை*

இக்குழுவின் விசுவாசத்தை மெச்சி அவர் பேசியிருந்தால் (வச 23),
அது பொருத்தமாயிருந்திருக்காது!

- இந்தத் *"தன்னடக்கம்" ஆவியின் கனிகளில்* ஒன்று — (கலா 5:23)

(உ-ம்) யோசேப்பு தன் சகோதரரை அடையாளங்கண்டான் ...
ஆனால் ஏற்ற வேளை வரக் "காத்திருந்தான்!"
ஆதி 42:24; 43:30

அடக்க முடியாதபோதும், தனியே சென்று இரகசியமாய் அழுதான்!

- மற்றுமொரு பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டு: நெகேமியா —
  நெகே 2:12... (முதலாவது) *நான் ஒருவருக்கும் அறிவிக்கவில்லை*
  :16,17 ... *பின்பு நான் அவர்களிடம் சொன்னேன்*
- தேவனிடமிருந்து வரும் ''வெளிப்பாடு,'' பிறருக்கு ''அறிவிப்பு''— இவையிரண்டிற்கும் இடையில் ''சிந்திப்பு'' இருக்கவேண்டும்.

  □ தானியேல்:
  தானி 7:28 ... *இக்காரியத்தை மனதிலே வைத்தேன்*

  □ மரியாள்:
  லூக் 2:19 ... *மரியாளோ ... தன் இருதயத்திலே வைத்து*
  2:51 ... *அவரது தாயாரோ ... இருதயத்திலே வைத்து*

சொப்பனம், தரிசனம் அல்லது தீர்க்கதரிசனம் மூலம்
தேவன் எதையாவது உங்களுக்கு வெளிப்படுத்தினால்,
அதை உடனே ஒலிபரப்ப வேண்டாம்.
அதைக் குறித்து ''யோசிக்க,'' அதை ''நிதானிக்க,'' நேரமெடுங்கள்.
— தேவைப்பட்டால் சில முதிர்ந்த அனுபவசாலிகளோடு சேர்ந்து—

(உ-ம்) 1 கொரி 14:29,30 ... *வெளிப்படுத்தப்பட்டால் ... பேசாமலிருக்கக்கடவன்*

''பேசாமலிருத்தல்'' — ஆவியானவரின் 10ஆவது வரம்!!!

- ''என்ன'' பேசுகிறோம் என்பது மட்டுமல்ல,
  ''எவரிடம்'' பேசுகிறோம் என்பதும் முக்கியம் —
  மத் 7:6... *''முத்துக்களைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்''*
  (உ-ம்) கலா 2:2 ... *தேவ அறிவிப்பு ... தனிமையாய் விவரித்து ...*

நம்பிக்கைக்குரிய, முதிர்ச்சியடைந்தவர்களிடம் **மட்டுமே** மனம் திறக்கலாம் —

2 கொரி 7:2,3...அப்போஸ்தலர்: *''எங்களிடம் மனம்திறந்திடுங்கள்''*
நிபந்தனை: (அ) 6:11 ... ஒருவருக்கொருவர் திறந்த மனது
(ஆ) 7:3 ... தன்னலமின்மை

அப்படியானால், *''ஒளியிலே நடத்தல்''* என்றால் என்ன? (1 யோ 1:7)

*''அவர்'' ஒளியிலிருக்கிறதுபோல ...*

— தேவன் எல்லா நினைவுகளையும் வெளிப்படுத்துவது **இல்லையே!**

*''இரத்தம் நம்மைத் தூய்மையாக்குகிறது''*

— இங்கு குறிப்பிடப்படுவது ***''பாவங்கள்''***

☐ உடன் சகோதரருக்கு விரோதமாய் இரகசிய ஆலோசனையில் ஈடுபடாமல் கவனமாயிருங்கள்!

☐ ''திறந்த மனது'' என்ற பெயரில் யாரும் உங்களை ''வசப்படுத்தி'' விடாதபடிக் கவனமாயிருங்கள்!

(உ-ம்) தங்களிடம் பாவ அறிக்கை செய்ய
சில கள்ள அப்போஸ்தலர் வற்புறுத்துகின்றனர்.

இது ஒரு துர்வுபதேசக் கும்பல்.

எவராயினும் உங்கள் மனதைக் ''கண்டறிய'' இடங்கொடாதீர்!

## 9. ஆத்திரப்பட்டு முடிவுகள் எடுக்கக்கூடாது.
Do not rush into conclusions.

■ நாம் அவசரப்பட்டு முடிவுகள் எடுப்பது —

(அ) நமது காரியங்களிலும்

(ஆ) பிறரது காரியங்களிலும்

(உ-ம்) சங் 31:22 ... நம்மைக் குறித்தது —

*வெட்டுண்டேன் ... என் மனக்கலக்கத்தில் சொன்னேன்*

116:11 ... பிறரைக் குறித்தது —

*எந்த மனிதனும் பொய்யன் ... என் மனக்கலக்கத்தில் சொன்னேன்.*

ஆத்திரம் என்பது மடமை —

நீதி 14:29 ... *முற்கோபி ... புத்தியீனம் ...*

29:20 ... *வார்த்தைகளில் பதட்டம் ... மூடன் ...*

ஒரு பழமொழி:

*ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு!* (ஒரு முழம் குட்டை!)

■ ஆத்திரப்பட்ட முடிவுகள் எங்கே கூடாது?

**(அ)** பிறரை நமது மனதில் நியாயந்தீர்ப்பது —

□ லூக் 13:1-3 ... *பிறரைவிடப் பாவிகளென்று நினைக்கிறீர்களா? இல்லை.*

(உ-ம்) ஒரு நபரையோ நாட்டையோ குறித்து ஒரு செய்தி கேள்விப்பட்டவுடன் நாம் சொல்லும் கருத்து?

□ யோ 9:1-3 ... *குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம்?*

□ அவசர முடிவானது அக்காரியத்தின் முக்கியத்துவத்தைச் சிந்திக்கவிடாது —

(உ-ம்) *பெதஸ்தா ... 38 ஆண்டு ... ஓய்வு நாளில் சுகமளிப்பு*
யோ 7:23,24 ... *தோற்றத்தின்படி தீர்ப்புச் செய்கிறீர்களோ?*

இதே அத்தியாயத்தில் நிக்கொதேமுவைச் சந்திக்கிறோம் ...
அவன் மறுபடி பிறக்கவில்லையெனினும் அவனது மனப்பாங்கு —
*"...கேட்டு...அறிகிறதற்குமுன்...தீர்த்துக்கட்டலாமா?"* (யோ 7:50,51)

சில சமயங்களில் அவிசுவாசிகளைவிட விசுவாசிகள் கொடூரம்!
*காலத்துக்குமுன்னே ... தீர்ப்புச் சொல்லாதிருங்கள்* (1 கொரி 4:5)

**எல்லாத்** தகவல்களும் விவரங்களும் இருந்தால்தான் தீர்ப்பு
சொல்ல முடியும்; உண்மையில், அவை நம்மிடம் இல்லையே!

எனவே **தேவன்** மட்டுமே எவரையும் நியாயந்தீர்க்க முடியும்!

பிறரைத் தீர்ப்பு செய்துகொண்டே இருப்போர்
பிறர் அவர்களைக் குறித்து என்ன நினைக்கிறார்கள்
என்ற எண்ணத்தாலேயே ஆளப்படுவர்.

☐ சரியென்று திட்டமாய்த் தெரிந்தபடியே நடந்திடுங்கள்;
உலகத்தைத் திருப்திப்படுத்தவே முடியாது —
லூக் 7:31-35 ... *யோவான் ... பிசாசு பிடித்தவன் ...*
*இயேசு ... சாப்பாட்டுப் பிரியன்*

போற்றுவோர் போற்றட்டும்; தூற்றுவோர் தூற்றட்டும்!
(Appreciation or abuse, don't bother!)
மனம் சிதறாது உங்கள் வேலையைத் தொடருங்கள் —

(உ-ம்) இயேசு
யோ 7:12,14 ... *சிலர்: அவர் நல்லவர் என்றனர்;*
*வேறு சிலர்: ... அவன் ... வஞ்சிக்கிறவன் என்றனர்.*

எவரது மதியீனச் செயலாவது எரிச்சலுண்டாக்குவதாயிருந்தாலும்,
அமைதியாயிருக்க நமது மனதைப் பழக்குவிக்க வேண்டும் —

பிர 7:9 ... *மனதில் சீக்கிரம் கோபங்கொள்ளாதே;*
*மூடரின் நெஞ்சிலே ...*

**(ஆ)** நம்மைக் குறித்தவற்றில் முடிவுகள் எடுக்கும்போது —

(உ-ம்) பழைய ஏற்பாட்டில் திருமணம் பற்றிய சம்பவங்கள் —

☐ ஆபிரகாமின் வேலைக்காரன் ... ஈசாக்கு ... ரெபேக்காள் ...

ஆதி 24:21 ... *எப்படியாகுமென்று அறிய மவுனமாயிருந்தான்*

அவன் எதிர்பார்த்தவை நடந்தபோதிலும் (வச 14,19)

☐ நகோமி ... ரூத் ... போவாஸ்

ரூத் 3:18 ... *நீ அறியுமட்டும் பொறுத்திரு ...*

*''விசுவாசிக்கிறவன் பதறான்''*

ஏசா 28:16 ... *''பரிசோதிக்கப்பட்ட கல் ... அஸ்திபாரம்''*

அதாவது யாவும் தேவனது கரத்தில்தான் என்று அவன் அறிவான்.

ஒரு பழமொழி: ''அவசரமாய்க் கல்யாணம்பண்ணு;

நிதானமாய்க் கவலைப்படு!''

Marry in haste; worry at leisure!

**(இ)** நெருக்கங்களும் பிரச்னைகளும் நம்மைப் பைத்தியமாக்கி சிந்தைகள், சொற்கள், செயல்களில் ஆத்திரமடையச்செய்யும்—

சங் 46:10 ... *''நீங்கள் அமர்ந்திருந்து ... அறியுங்கள்''*

எப்போது?

— *''கொந்தளிக்கும் அலைகள்''* (வச 3,4)

ஆனால் நம்மை மகிழ்விக்கும் *''நதி''*

— *''அதிரும் மலைகள்''*

ஆனால் பாதுகாப்பாய்த் தங்கியிருக்க தேவாலயம் (வச 3,5)

(உ-ம்) இஸ்ரவேலரை எகிப்தியர் துரத்தியபோது —

யாத் 14:11-13 ... *எகிப்திலே கல்லறைகள் இல்லையா?*

நாம் எகிப்தைவிட்டு வந்திருக்கக்கூடாது என்று நினைத்தார்கள்!

மோசேயின் பதில்:

*''நின்றுகொண்டு கர்த்தர் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்!''*

## 10. கடந்த காலத்தையே நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

Do not be thinking too much about the past.

- நமது கடந்தகால நன்மைகளை எண்ணிப்பார்க்கும்படி பைபிள் அடிக்கடி நம்மை அழைக்கிறது —

உபா 32:7 ... தேவன் நமது முற்பிதாக்களை எப்படி நடத்தினார்
*... பூர்வ நாட்களை நினை ... தகப்பனை ... மூப்பர்களை ...*

(உ-ம்) வங்கியில் சேமிப்பேதுமின்றி எனது தாயார் சமாளித்தார்கள்
— கடன் வாங்காமலேயே!

சங் 77:11 ... *உமது பூர்வ காலத்து அதிசயங்கள் ...*

*ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்;*
*கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்!*

*Count your blessings; Name them one by one;*
*And it will surprise you what the Lord has done!*

— Johnson Oatman, 1856-1922

எபி 10:32 ... *முந்தின நாட்கள் ... போராட்டம் ... சகித்தீர்களே.*

கடந்தகால வெட்கத்துக்குரிய வாழ்வையோ மறந்துவிடவேண்டும்.
(உ-ம்) பவுல் — மாம்சீகத்தில் வாழ்ந்தது ... பிலி 3:4-8
இப்பொழுதோ, வச 13-16
*"... மறந்து ... சிந்தை ... ஒரே சிந்தை ..."*

- உங்களது பழைய பாவங்களை நினைக்கவேண்டாம் (2 பேது 1:9) தேவனே "மறந்தவற்றை" நாம் "நினைக்க" உரிமை உண்டோ?

நமது பாவங்கள் எங்கே?

*"முதுகுக்குப்பின்"* எறியப்பட்டன (ஏசா 38:17ஆ)
*"கடலின் ஆழத்தில்"* மூழ்கடிக்கப்பட்டன (மீகா 7:19)
*"மேகத்தைப்போல"* அகற்றப்பட்டன (ஏசா 44:22)
*"மேற்குக்கும் கிழக்குக்குமாய்"* விலக்கப்பட்டன (சங் 103:12)

அவரது *''மன்னிப்பில்தான்''* அவரது மகத்துவமே இருக்கிறது —
அங்கேதான் *அவரது நினைவுகள் உயர்ந்தவை* ... ஏசா 55:7-9

— சில பாவங்கள் நமது மனதில் வடுக்களை விடலாம் ...

(உ-ம்) தாவீதின் பாவம் ...

அவனது அறிக்கையைப் பாருங்கள் —

சங் 51:1,9 ... *''நீக்கும்''*

:2 ... *''முற்றிலும் கழுவும்''*

:7 ... *''ஈசோப்பினால் சுத்திகரியும்''*

மன்னிப்பையெல்லாம் மிஞ்சியது!

பாவ அறிக்கையிலேயே அவன் சொல்வது —

(அ) நான் எப்படி ''இருப்பேன்?'' ... வச 7

... *''உறைந்த மழையிலும் வெண்மையாவேன்''*

(ஆ) நான் என்ன ''செய்வேன்?''... வச 13 ... *''உபதேசிப்பேன்''*

வச 14,15 ... *''கம்பீரமாய்ப் பாடுவேன்''*

ஒரு தோல்வியும் முடிவானதல்ல!

நமது தேவன் இன்னொரு தருணம் தருபவர்!

(Not final! Another chance!)

■ நமது பாவங்களை மட்டுமல்ல,
பிறர் இழைத்த தவறுகளையும் தீங்குகளையும் மறந்துவிடவேண்டும்;
அப்பொழுதுதான் சகவுறவுகள் மேம்படும் —

இரு எடுத்துக்காட்டுகள் —

(அ) பழைய ஏற்பாடு: யோசேப்பு

— **நாம்** பிறருக்குச் செய்த தீமையை நினைக்கவேண்டும்!

(ஆதி 42:21.22)

— நமக்குப் **பிறர்** செய்த தீமையை மறக்கவேண்டும்!

(ஆதி 45:5,8)

(ஆ) புதிய ஏற்பாடு: ஒநேசிமு

பவுல் பிலேமோனுக்கு எழுதியது —

பிலே 10-12 ... *''முன்பு ... இப்பொழுதோ''*

சிறு பிள்ளைகளைப் போலிருங்கள் —

சண்டையிடுவர், ஆனால் உடனே மறந்துவிடுவர்!

*''கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள் ...*

*சூரிய அஸ்தமனம்''* ... (எபே 4:26)

■ முக்கியமாக தம்பதியர்க்கிடையில் —

வாழ்க்கைத் துணையின் கடந்தகாலத் துரோகங்களை மறக்கமுடியுமா?

கடினம்தான்;

ஆனால் அதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்காட்டுவதைத் தவிர்க்கலாமே!

''கடந்தது கடந்ததுதான்!'' (Past is past!)

■ நாம் கடந்த காலத்தை மறக்காவிடில்,

எதிர்காலத்திலிருப்பவைகளில் கவனம் செலுத்தமுடியாது —

புதிய சுமையேற்றுமுன் பழையதை இறக்கிவிடுங்கள்;

இல்லையேல் பளு தாங்க முடியாததாகிவிடும்.

Excess baggage! அனுமதிக்குமேல் சாமான்!

*''பாவம்''* — **தேவன்** அகற்றிவிடுகிறார்;

*''பாரம்''* — **நாம்** தள்ளிவிடவேண்டும்!

இல்லையேல், *''பந்தயத்தில் ஓட''* முடியாது (எபி 12:1)

■ தேவனது பெரிய திட்டங்களுக்காக உங்களது சின்ன ஆசைகளை விட்டுவிடுங்கள் —

□ யோசேப்பின் சகோதரர்க்குப் பார்வோன் சொன்னது —

ஆதி 45:20 ... *உங்கள் தட்டுமுட்டுகளைக் குறித்துக் கவலை வேண்டாம்;...நாட்டில் சிறந்தவையெல்லாம் உங்களுக்கே!*

□ லூக் 9:61,62

வாழ்வின் சில காரியங்களை வழியனுப்பாவிடில்,

வழி நெடுகவே அவஸ்தைதான்!